திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி, திருத்தங்கல் சம்பந்தப்பட்ட நகரங்களுக்கு குடிநீர் தட்டுப்பாடு மிகக் கடுமையாக இருக்கிறது. என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஆவே, அந்த இரண்டு நகரங்களுக்கும் எந்த இடத்தில் இருந்து தண்ணீர் கொண்டு வர திட்டமிடப்பட்டு இருக்கிறது? எவ்வளவு காலத்தில் அந்தத் திட்டம் நிறைவேறும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, அர்ஜுனா ஆற்றை ஆதாரமாகக் கொண்டு ஒரு குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்திற்கான ஆய்வு தயாரிக்கப்பட்டு வருகிறது.

விளாத்திக்குளம் தொகுதியிலுள்ள புதூர் நாகலாபுரம் பேரூராட்சிப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

*வினா எண் 132— திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் விளாத்திகுளம் தொகுதியிலுள்ள புதூர், நாகலாபுரம் பேரூராட்சிகளுக்கு குடிநீர் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

(இ) எப்பொழுது வேலை ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) நெல்லை மாவட்டம் விளாத்திகுளம் தொகுதியில் உள்ள புதூர் பேரூராட்சிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது. விளாத்திகுளம் தொகுதியில் உள்ள நாகலாபுரம் ஊராட்சிக்கு குடிநீர் வழங்க திட்டம் ஏதும் தற்போது இல்லை.

(ஆ) புதூர் பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கும் திட்டத்திற்கான மதிப்பீடு விரிவான ஆய்வு நடத்திய பின்னர் கணக்கிடப்படும்.

(இ) புதூர் குடிநீர்த் திட்ட ஆய்வுக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டவுடன் ஆய்வு வேலைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புதூர், நாகலாபுரம் ஆகிய இடங்கள் ஏற்கனவே நெல்லை மாவட்டத்தின் கடைகோடிப் பகுதியாக இருக்கின்றன. அந்த இடத்தில் எங்கு கிணறு தோண்டினாலும் உப்புத் தண்ணீர் தான் கிடைக்கும். ஆகவே, அந்தப் பகுதிகளில் கண்மாய்களைத் தோண்டி, மழைக் காலங்களில் கிடைக்கும் நீரைத் தேக்கி வைத்துத் தான் அந்தப் பகுதி மக்கள் தற்போது பயன்படுத்தி வருகிறார்கள். பெரிய முனிசிபல் நகரங்களுக்கு—குறிப்பாக

1983 பிப்ரவரி 4]

கோவில்பட்டி நகரத்திற்குக் குடிநீர் கொண்டு வந்ததுபோல்—தாம்பரபரணியில் இருந்து தண்ணீர் கொண்டு வருவதற்காக தனியாகக் குழாய் போட்டு, குடிநீர் வசதி செய்து தருவதுபோல், இந்தப் பகுதிக்கும் தனியாக லைன் போட்டு, தண்ணீர் கொண்டு வந்து, அந்தப் பகுதியில் உள்ள குடிநீர் கஷ்டத்தைப் போக்குவதற்கு துரிதமான நடவடிக்கை எடுக்க பரிசீலனையில் இருப்பதாக உண்மையாகவே நடவடிக்கைகளில் இறங்குவதற்கு துரிதமான நடவடிக்கைகளை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகலாபுரம் கேட்டகரி-6 ல் வருகிறது. அப்படி என்று சொன்னால் போதுமான அளவிற்கு நல்ல குடிநீர் இருக்கக்கூடிய ஊர் என்று பொருள். எனவே, அதை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று யாராவது சட்டமன்ற உறுப்பினர்கள் எழுதி கலெக்டரிடத்தில் அனுப்புவார்களானால், அதை மறு பரிசீலனை செய்வார்கள். புதூருக்கு தண்ணீர் கொடுப்பதற்கான திட்டங்கள் இப்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன.

திரு. ரா. கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததுபோல் அந்த நாகலாபுரம்-புதூர் போன்ற பகுதிகள் கரிசல் மண் பூமியாக இருப்பதால் அங்கே தண்ணீர் சரியாகக் கிடைப்பது இல்லை. கிடைக்கும் தண்ணீரும் உவர் நீராகத்தான் இருக்கிறது என்பது உண்மை. அந்த இடத்திற்குப் பக்கத்திலே வைப்பாறு ஓடிக் கொண்டு இருக்கிறது. அங்கேயிருந்து கூட குடிநீர் திட்டம் உருவாக்க முடியும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நாகலாபுரம் 6—வது கேட்டகரியில் வருகிறது என்று சொன்னார்கள். இந்த கேட்டகரி பிரிப்பது என்பது ஒரு மோசடி தான். அப்படிச் சொல்லக்கூடாது என்றாலும் கூட, அது சரியான முறையில் செய்யப்படவில்லை. ஆகவே, அதை மறு பரிசீலனை செய்து அந்த கேட்டகரியை மாற்றி அமைத்து, இந்த சட்டமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்ட கேள்வியை அடிப்படையாக வைத்தே அதை மாற்றியமைத்து, நாகலாபுரம்-புதூருக்கு தண்ணீர் கொடுக்க அரசு உடனடியாக முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, கேட்டகரி பிரிப்பது மோசடி என்று சொல்வது சரியல்ல. அதைப் பிரித்தவர்கள் அவர்களுக்குத் தெரிந்த அறிவு ஆற்றலை வைத்து அதைச் செய்து இருக்கிறார்கள். அப்படிச் செய்ததை மாற்றி அமைக்க வேண்டும் என்று சொன்னால், தக்க ஆதாரங்கள் இருந்தால், அதை மாற்றியமைக்கத் தயாராக இருக்கிறோம். நாம் ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்களுக்கு பதில் அளிக்கின்ற போது கூறியமாதிரி வேண்டுகோள் வருமானால் நிச்சயமாகப் பரிசீலனை செய்யப்படும்.

(முற்பகல் 9–50)

திரு தி. கா. நல்லப்பன், தலைவரவர்களே, 1 2 3, 4 5, 6 என்று இப்போது தரம் பிரிக்கப்பட்டிருக்கிறது. அது ஏற்கெனவே குடிநீர் இருக்கிற அந்த கால கட்டத்திலே பிரிக்கப்பட்டது. ஆனால் இன்றையதினம் பல்வேறு இடங்களிலே குடிநீர் இல்லாமல் இருக்கின்ற காரணத்தினால் இந்த தரத்தைக் கணக்கிடாமல் தண்ணீர் இல்லை என்று சொல்லுகின்ற பகுதிகளுக்கு உடனடியாக தண்ணீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; தலைவரவர்களே தரம் பிரிக்கப்பட்டது 1976–ல், அதற்குப் பின்னால் 'மெனி சேஞ்சல் ஹ்ராவ் பின் மேய்ட்' மாண்புமிகு உறுப்பினர்கள் அவ்வப்போது கொடுத்த கருத்துக்களை வைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குத் தெரிவித்து, அவர்கள் பி.டி.ஓ–க்களுக்கு அனுப்பி, ஆய்வு செய்து தேவையான மாற்றங்கள் நிறைய செய்யப்பட்டிருக்கின்றன. சில இடங்களில் ஆய்வு செய்ததில், 6–வது பிரிவில் இருந்த இடங்கள் 3–வது பிரிவுக்கு கொண்டு வரப்பட்டிருக்கின்றன. எல்லா இடங்களிலும் அப்படி மாற்ற வேண்டுமென்ற உணர்வு இல்லாமல், உரிய ஆதாரங்களோடு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தால், அதிகாரிகளைக் கொண்டு பரிசீலனை செய்து, அக்கறையோடு உரிய நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது.

போளூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியிலுள்ள கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

*வினா எண் 133—திரு இல. பலராமன்; மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு' விடையளிப்பாரா—

போளூர் வட்டாரத்தில் எத்தனை கிராமங்களுக்கு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் குடிநீர் வழங்க 1980–1981ம் ஆண்டும், 1981-1982ம் ஆண்டும் திட்டமிடப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; வட ஆற்காடு மாவட்டம், போளூர் ஊராட்சி ஒன்றியத்தில் 1980–81ம் ஆண்டில் முதலாம் கட்ட தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 9 சிற்றூர்களுக்கு குடிநீர் வசதியளிக்கப்பட்டுள்ளது. 1981-82ம் ஆண்டில் வறட்சி நிவாரணப் பணித் திட்டங்களின் கீழ் இந்த ஒன்றியத்தைச் சேர்ந்த 23 சிற்றூர்களின் குடிநீர்த் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு உள்ளது. இப்போது நிலைமை சரியாக இருக்கிறது.